Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஜனவரி 02 2024 | இதழ் 170

# தமிழகத்துக்கு வந்தால் புதிய சக்தி பிறக்கிறது வெள்ள பாதிப்பில் இருந்து மீள தமிழகத்திற்கு துணை நிற்போம்: பிரதமர் மோடி உறுதி

## திருச்சியில் புதிய சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்தார் ரூ.20 ஆயிரத்து 140 கோடி திட்டங்களுக்கு அடிக்கல்



சென்னை, 02 ஜனவரி 2024: வெள்ள பாதிப்பில் இருந்து மீள தமிழக மக்களுக்கு மத்திய அரசு துணை நிற்கும். தமிழகத்திற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வருகிறது என்று திருச்சி சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்து பிரதமர் மோடி பேசினார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சி விமான நிலையத்தின் 2-வது முனையம் திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் பிரதமர் மோடி இன்று திருச்சி வந்தார். முதலாவதாக பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மோடி கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இதனையடுத்து பட்டமளிப்பு விழாவை முடித்துக்கொண்டு சாலை வழியாக காரில் பகல் 12 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்தடைந்தார் பிரதமர் மோடி. அங்கும் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன் பிறகு ரூ.1112 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சர்வதேச விமான முனையத்தை பார்வையிட்டார். அப்போது அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி சிறப்பம்சங்களுடன் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்த புதிய விமான முனையத்தை திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

முன்னதாக விழா மேடையில் தமிழ்தாய் வாழ்த்து பாடிய மாணவர்களை அழைத்து பிரதமர் மோடி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, தமிழக அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், திருநாவுக்கரசர் எம்.பி. உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் நிகழ்ச்சியில், ரூ.20 ஆயிரத்து 140 கோடியில் தமிழகத்தில் பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்.

காரைக்குடி ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை நடைபாதையுடன் கூடிய 2 வழிப்பாதை எண்ணூர், திருவள்ளூர், நாகை, மதுரை, தூத்துக்குடி, இயற்கை எரிவாயு குழாய் திட்டம் உள்ளிட்ட திட்டப்பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இது தொடர்பான காணொலியும் திரையிடப்பட்டது.

இதனையடுத்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை மற்றும் தென் மாவட்ட வெள்ள பாதிப்புகளுக்கு உடனே நிதி வழங்குமாறு வலியுறுத்தினார்.

இதன்பின்னர் வணக்கம் என தமிழில் சொல்லி உரையை பிரதமர் மோடி தொடங்கினார்.

தொடர்ந்து பிரதமர் மோடி பேசியதாவது:-

மழை, வெள்ளம் காரணமாக தமிழக மக்கள் கடந்த ஆண்டு கடுமையான துயரத்தை அனுபவித்தீர்கள். அதிக வலியை அனுபவித்தீர்கள். இந்தத் துயரமான நேரத்தில் தமிழகத்துக்கு மத்திய அரசு உறுதுணையாக இருந்து வருகிறது. வெள்ள பாதிப்பில் இருந்து மீள தமிழக மக்களுக்கு மத்திய அரசு துணை நிற்கும். தமிழகத்திற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வருகிறது.

முன்பை விட 3 மடங்கு அதிக நிதியை தமிழகத்திற்கு மத்திய அரசு செலவு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் மாநிலங்களுக்கு ரூ.120 லட்சம் கோடி நிதியை மத்திய அரசு அளித்துள்ளது. தமிழகத்துக்கு வரலாறு காணாத நிதி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு பெரும் நிதியை செலவு செய்து வருகிறது. தமிழக இளைஞர்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. அவர்களிடம் இருக்கும் உற்சாகம்தான் வளர்ச்சியடைந்த பாரதத்தின் நம்பிக்கையாக மாறும்.

25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் இரண்டும் சேர்ந்த வளர்ச்சி தான். பாரத நாட்டின் வளம் மற்றும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு தான் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் தான் திருவள்ளுவர் உள்ளிட்டோர் சிறப்பான இலக்கியங்களை படைத்துள்ளார்கள்.

விஜயகாந்தின் மறைவு திரைத்துறைக்கு மட்டுமல்ல அரசியலுக்கும், மக்களுக்கும் இழப்பு. எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவும் மிகவும் வேதனையை ஏற்படுத்தியது. சர் சி.வி.ராமன் போன்ற திறமையாளர்களை இந்த தமிழக மண் உருவாக்கியுள்ளது.

திருச்சி என்று சொன்னாலே, எல்லா இடங்களிலும் சிறப்பான விஷயங்கள் கொட்டிக்கிடக்கின்றன என்றார். திருச்சியில் சோழர்கள், பாண்டியர்கள், பல்லவர்கள், நாயக்கர்களின் வரலாற்று சுவடுகள் உள்ளன.

தமிழ்நாட்டிற்கு நான் வரும் போதெல்லாம் புதிய சக்தியை எனக்குள் நிரப்பி செல்கிறேன். எனக்கு ஏராளமான தமிழ் நண்பர்கள் உண்டு. அவர்களிடமிருந்து தமிழ் கலாச்சாராத்தை நான் கற்று கொள்கிறேன். நான் எங்கு சென்றாலும் தமிழ்நாட்டின் கலாச்சாரம் குறித்து பேச மறப்பதில்லை. எனக்கு தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் குறித்து உற்சாகம் அதிகரித்து கொண்டே இருக்கிறது.

25 ஆண்டுகளில் பாரதத்தை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும். இந்தியா உலகின் தலைசிறந்த நாடுகளின் பட்டியலில் 5வது இடத்தில் உள்ளது. நவீன கட்டமைப்பில் முதலீடு அதிகரித்துள்ளது; அதன் நேரடி பயன் தமிழகத்திற்கு கிடைத்து வருகிறது. மேக் இன் இந்தியா' திட்டத்தின் சிறப்பான தூதுவராக தமிழகம் மாறி வருகிறது. திருச்சியில் திறந்து வைக்கப்பட்ட புதிய முனையத்தால் வளர்ச்சி பெருகும்; விமான நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சாலையுடன் இணைப்பதால் வெளிநாட்டினர் வருகை அதிகரிக்கும். தமிழகத்தில் ரெயில் போக்குவரத்து மேம்படுத்தப்படுவதால் தொழில் வளர்ச்சியடையும்.

கட்டுமானம், சமூக சட்டமைப்பில் இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளோம். சாலை கட்டமைப்பு வசதிகளால், வணிகம், சுற்றுலா தமிழகத்தில் பெருகும். புதிய சாலை திட்டங்களால் ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, ராமேஸ்வரம், வேலூர் பயன்பெறும்.

உலகின் 5-வது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா வளர்ந்துள்ளது. பெரிய பெரிய முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்து வருகின்றனர்.

புதிய பாராளுமன்ற கட்டிடத்தில் தமிழ்நாட்டின் செங்கோல் நிறுவப்பட்டுள்ளது.

காசி தமிழ் சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன. துறைமுக கட்டமைப்புகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. மீன்வளத்துறைக்கு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

மீனவர்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சாகர் மாலா திட்டத்தால் துறைமுகங்களை சிறந்த சாலைகள் மூலம் இணைத்துள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் முன்னதாக பேசிய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பேசுகையில், புண்ணிய பூமி மற்றும் ஆன்மீக பூமியான திருச்சிக்கு வந்துள்ள பிரதமர் மோடியை வரவேற்கிறேன். பிரதமர் மோடி தமிழகத்திற்கு வரும் போது பல்லாயிரக்கணக்கான திட்டங்களை கொடுத்து கொண்டு இருக்கிறார். கடந்த 9 ஆண்டுகளில் ரூ.11 லட்சம் கோடி திட்டங்களை தமிழகத்திற்கு பிரதமர் மோடி கொடுத்துள்ளார். திருக்குறளை உலகம் முழுவதும் எடுத்துச் சென்றவர் பிரதமர் மோடி. காசிக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையே உள்ள தொடர்பை காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி மேலும் வலுப்படுத்துகிறது. காசி தமிழ் சங்கமத்தை 2வது முறையாக நடத்திய பெருமை பிரதமரையே சேரும். இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என பிரதமர் மோடி உறுதி பூண்டுள்ளார் என்றார்.

இதனையடுத்து மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா பேசியதாவது:- இந்தியா பொருளாதாரத்தில் மட்டுமின்றி கலாச்சாரத்திலும் சிறந்து விளங்க வேண்டும். ஆன்மிகம், கலாச்சாரம் என பல்வேறு பெருமைகளை கொண்டது திருச்சி மாநகர். புண்ணிய தலமான திருச்சிக்கு பிரதமர் மோடியை வரவேற்கிறோம். தமிழ்நாட்டின் தூய்மையான நகரமாக திருச்சி விளங்குகிறது. திருச்சியின் வரலாற்றில் இன்று புதிய அத்தியாயம். சாதாரண குடிமகன் கூட விமானத்தில் பயணிக்கும் நிலையை பிரதமர் ஏற்படுத்தி உள்ளார். 2032க்குள் 42 கோடி மக்கள் விமான பயணம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

விமான போக்குவரத்து வளர்ச்சிக்கான மையமாக தமிழகம் திகழ்கிறது. நெய்வேலி, வேலூரில் விரைவில் விமான சேவை துவங்கும். அடுத்த 50 ஆண்டுகளை கருத்தில் கொண்டு திருச்சி முனையம் மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உணர்த்தும் வகையில் கலை நயத்துடன் கட்டப்பட்டுள்ள புதிய முனையம் 60,723 சதுர மீட்டர் பரப்பளவில் 2 அடுக்குகளை கொண்டதாக அமைக்கப்பட்டு உள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 4 ஆயிரம் சர்வதேச பயணிகளையும், 1,500 உள்நாட்டு பயணிகளையும் கையாள முடியும். மேலும் 10 புதிய ஏரோ பிரிட்ஜ்களும், ஒரே நேரத்தில் 10 விமானங்களை நிறுத்தும் வகையில் விமான நிறுத்தம் தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் காத்திருப்பை தவிர்த்திடும் வகையில், புறப்பாடு பகுதியில் 10 வாயில்கள், வருகை பகுதியில் 6 வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. 40 குடியேற்றப் பிரிவு மையங்கள், 48 செக் இன் மையங்கள், 3 சுங்கப்பிரிவு மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 3 இடங்களில் விஐபி காத்திருப்பு அறைகள், 26 இடங்களில் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர், 1,000 கார்களை நிறுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்கவேண்டும் வெள்ள நிவாரண நிதி உடனே வழங்குங்கள் பிரதமரிடம் நேரில் ஸ்டாலின் கோரிக்கை



சென்னை, 02 ஜனவரி 2024: திருச்சியில் நடந்த அரசு விழாவில் பங்கேற்ற பிரதமரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேருக்கு நேர் பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்து நிறைவேற்றி தர வலியுறுத்தினார்.

சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தை அடுத்து, 'கடுமையான இயற்கை பேரிடர்கள்' என்று அறிவித்து தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உரிய நிதி வழங்க வேண்டும் என்று ஸ்டாலின் வலியுறுத்தினார்.

சென்னை மெட்ரோ ரெயில் 2 ம் கட்ட திட்ட பணிகளுக்கு மத்திய அரசு தனது பங்கை விரைந்து வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சென்னை உட்பட 6 விமான நிலைய விரிவாக்க பணிகளை விரைந்து முடிக்க வேண்டும், மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கோரிக்கை வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (2 ந் தேதி) திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டட திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசியதாவது:

தொட்ட துறை அனைத்திலும் சிகரத்தை தொட்ட மாநிலமான தமிழ்நாடு இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

அப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டின் இதயப்பகுதியாக இருக்கும் திருச்சியின் "பன்னாட்டு விமான நிலையத்தில், ஆயிரத்து 112 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய முனையத்தை" பிரதமர் திறந்து வைத்து சிறப்பித்திருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்கிற வகையில், தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்தத் துறையின் அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியாவுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையம் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய பன்னாட்டு விமான நிலையம். இதை மேலும் தமிழ்நாடு அரசு 318 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில், 294.57 ஏக்கர் நில எடுப்பு செய்து இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், திருச்சி உட்பட சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தூத்துக்குடி விமான நிலையங்களை விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்த 3 ஆயிரத்து 118 கோடி ரூபாய் செலவில், 2,302.44 ஏக்கர் அரசு மற்றும் பட்டா நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விரிவாக்கப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

தென் தமிழ்நாட்டில் ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் ஆன்மீகப் பயணமாக வருகிறார்கள். பல நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கிறார்கள். அவர்கள் எளிதாக வந்து செல்வதற்கு ஏதுவாக, மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே வைத்த கோரிக்கையை பிரதமர் கனிவோடு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

மலேசியா மற்றும் ஜப்பான் நாடுகளோடு - தமிழ்நாடு பண்பாட்டு மற்றும் வர்த்தகத் தொடர்புகளை கொண்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, சென்னை - பினாங்கு, சென்னை - டோக்கியோ இடையே நேரடி விமான சேவையை முன்னுரிமை அடிப்படையில் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்குப் 'பங்குப் பகிர்வு மாதிரி' அடிப்படையில் ஒன்றிய அரசின் பங்களிப்பை விரைந்து வழங்க பிரதமரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, திருச்சி மாவட்டத்தின் சிறு, குறு தொழில் நிறுவனங்கள்தான் 'பெல்' பொதுத்துறை நிறுவனத்துக்குத் தேவையான உதிரி பாகங்களை வழங்கிக் கொண்டு வந்தார்கள்.

தற்போது பெல் நிறுவனத்திடம் இருந்து இவர்களுக்கு கேட்பாணை மிகவும் குறைந்துவிட்டது. இதனால் இந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் மிகவும் பாதிப்படைந்து இருக்கிறார்கள். எனவே, பெல் நிறுவனம் மீண்டும் அதிகப்படியான கேட்பாணைகளை இவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்பட பிரதமரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமர் அறிந்த ஒன்றுதான்! கடந்த மாதம் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில், கடுமையான மழைப்பொழிவை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, அந்த மாவட்டங்களில் பொது உட்கட்டமைப்புகள் பெருத்த சேதமடைந்திருக்கிறது. மக்களின் வாழ்வாதாரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றை "கடுமையான இயற்கைப் பேரிடர்கள்" என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரண நிதியை வழங்க தமிழ்நாட்டு மக்கள் சார்பாக நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம். பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி, - மருத்துவம் - அவசியத்தேவைகள் - உதவிகள் ஆகியவற்றை செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் - மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிகைகள்தானே தவிர, அவை, 'அரசியல் முழக்கங்கள்' அல்ல.

அந்த வகையில், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு பிரதமர் நிச்சயமாக நிறைவேற்றி தருவார் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் எம். ஜோதிர் ஆதித்ய சிந்தியா, தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி, ஒன்றிய தகவல் ஒலிபரப்பு துறை மற்றும் மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஜே.எஸ்.எம். பிக்சர்ஸ் ஏ.ஆர். ஜாபர் சாதிக் தயாரிப்பில் குபேந்திரன் காமாட்சி இயக்கத்தில் 'கயல்' ஆனந்தி நடிக்கும் பெண்மையின் பெருமையை பறைசாற்றும் 'மங்கை' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை இயக்குநர்கள் வெற்றிமாறன், அமீர், நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டனர்



சென்னை, 02 ஜனவரி 2024: ஜே.எஸ்.எம். பிக்சர்ஸ் ஏ.ஆர். ஜாபர் சாதிக் தயாரிப்பில் குபேந்திரன் காமாட்சி இயக்கத்தில் பெண்மையின் பெருமையை எடுத்துரைக்கும் திரைப்படமாக 'கயல்' ஆனந்தி நடிப்பில் 'மங்கை' உருவாகி வருகிறது. இத்திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் எனப்படும் முதல் பார்வையை இயக்குநர்கள் வெற்றிமாறன், அமீர் மற்றும் நடிகர் விஜய் சேதுபதி ஆகியோர் வெளியிட்டனர்.

வெற்றிமாறன் மற்றும் தங்கம் கதையில் அமீர் இயக்கத்தில் அசார் மற்றும் மைதீன் ஆகியோர் நடிக்கும் 'இறைவன் மிகப் பெரியவன்,' மற்றும் வசந்த் ரவி நடிக்கும் 'இந்திரா' ஆகிய திரைப்படங்களையும் ஜே.எஸ்.எம். பிக்சர்ஸ் பேனரில் ஏ.ஆர். ஜாபர் சாதிக் தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

'இறைவன் மிகப் பெரியவன்' திரைப்படத்தின் முதல் பார்வை ஏ.ஆர். ஜாபர் சாதிக்கின் பிறந்த நாளை முன்னிட்டு சமீபத்தில் வெளியிடப்பட்டு பெரும் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், 'மங்கை' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. படத்தின் மையக்கருவை பிரதிபலித்து ரசிகர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் முதல் பார்வை அமைந்துள்ளது.

'மங்கை' குறித்து பேசிய இயக்குநர் குபேந்திரன் காமாட்சி, "ஒரு பெண்ணின் பயணத்தை மையமாகக் கொண்டு உருவாகி வரும் 'மங்கை' திரைப்படத்தில் இதுவரை ஏற்றிராத பாத்திரத்தில் கதையின் நாயகியாக ஆனந்தி நடிக்கிறார். துஷி, ராம்ஸ், ஆதித்யா கதிர் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

சசிகுமார் இயக்கத்தில் உருவான 'ஈசன்' திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடந்துள்ள துஷி, தயாரிப்பாளரும் தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்து முத்திரை பதித்து வருபவருமான ஜெயப்பிரகாஷின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

'மங்கை' திரைப்படம் பெண்ணை பற்றிய ஆணின் பார்வையை பேசும் விதமாகவும் ஒரு பயணத்தில் பெண் சந்திக்கும் நிகழ்வுகளை சொல்லும் விதமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு கேரளாவின் மூணாறு, பூப்பாறை, தமிழ்நாட்டின் தேனி, கம்பம், கூடலூர், லோயர் கேம்ப் மற்றும் சென்னையில் நடைபெற்றுள்ளது," என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "'மங்கை' திரைப்படம் மிகவும் சிறப்பாக உருவாகியுள்ளது. ஒவ்வொரு காட்சியும் ரசிகர்களை படத்தோடு ஒன்ற வைக்கும் என நம்புகிறேன்," என்று தெரிவித்தார். பல்வேறு தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் முன்னணி இயக்குநர்களோடு இணை இயக்குநராகவும் வசனகர்த்தாகவும் குபேந்திரன் காமாட்சி பணியாற்றியுள்ளார்.

ஜே.எஸ்.எம். பிக்சர்ஸ் ஏ.ஆர். ஜாபர் சாதிக் தயாரிப்பில் குபேந்திரன் காமாட்சி இயக்கத்தில் 'கயல்' ஆனந்தி நடிக்கும் 'மங்கை' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி உள்ள நிலையில் இப்படத்தின் இசையை பிப்ரவரியிலும் திரைப்படத்தை மார்ச் மாதத்திலும் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

# எஸ். தங்கராஜின் தங்கம் சினிமாஸ் மற்றும் சி.வி. குமாரின் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் முதன்மை வேடத்தில் அபி ஹாசன் மற்றும் திறமையான நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் இணையும் 'பீட்சா-4' படப்பிடிப்பு ஜனவரியில் ஆரம்பம்

சென்னை, 02 ஜனவரி 2024: தமிழ் திரையுலகில் திகில் திரைப்படங்களுக்கான புதிய டிரெண்டை ஏற்படுத்தி தக்க வைத்துள்ள 'பீட்சா' வரிசையின் முதல் மூன்று பாகங்களின் ஹாட்ரிக் வெற்றியை தொடர்ந்து அதன் நான்காம் பாகமான 'பீட்சா 4' படப்பிடிப்பு ஜனவரி மாதம் தொடங்க உள்ளது.



எஸ். தங்கராஜின் தங்கம் சினிமாஸ் மற்றும் சி.வி. குமாரின் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் இணைந்து தயாரிக்கவுள்ள இத்திரைப்படத்தில் பிரபல நடிகர் நாசரின் மகனும் 'கடாரம் கொண்டான்' மற்றும் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' உள்ளிட்ட படங்களில் நடித்தவருமான அபி ஹாசன் முதன்மை வேடத்தில் நடிக்கிறார்.

இது குறித்து பேசிய தயாரிப்பாளர் சி. வி. குமார், "'பீட்சா' முதல் மூன்று பாகங்களின் வெற்றியை தொடர்ந்து அதன் நான்காம் பாகத்தையும் தயாரிப்பது மிக்க மகிழ்ச்சி. ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து 'பீட்சா' வெற்றி பயணத்தை இப்படம் தக்க வைக்கும் என்று நம்புகிறேன். பொங்கலுக்குப் பின்னர் படப்பிடிப்பு தொடங்கி தொடர்ந்து நடைபெற உள்ளது," என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "'ராட்சசன்', 'மார்க் ஆண்டனி' மற்றும் 'சூது கவ்வும் 2' உள்ளிட்ட படங்களின் திரைக்கதையில் பணியாற்றிய எஸ் ஜே அர்ஜுன் 'பீட்சா 4' திரைப்படத்தின் கதை மற்றும் திரைக்கதையை எழுதியுள்ளார். வலுவான குழு இப்படத்திற்காக இணைந்துள்ளது. இதன் இயக்குநர், இதர நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்," என்று தெரிவித்தார்.

'பீட்சா 4' திரைப்படத்தில் நடிப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அபி ஹாசன், "தயாரிப்பாளர் சி வி குமார் அவர்களை சிறு வயது முதலே தெரியும், அவரது படத்தில் முதல் முறையாக நடிப்பது மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது. தரமான கதைகளையும் திறமையுள்ள இளைஞர்களையும் தொடர்ந்து ஊக்குவித்து வரும் அவர் 'பீட்சா 4' திரைப்படத்திற்கு என்னை தேர்ந்தெடுத்தது சந்தோஷமாக உள்ளது," என்றார்.

"'பீட்சா' முதல் மூன்று பாகங்களுக்கு நியாயம் செய்யும் வகையிலும், அதே சமயம் வழக்கமான திகில் திரைப்படங்களில் இருந்து மாறுபட்டும் ரசிகர்களுக்கு விறுவிறுப்பு விருந்து படைக்கும் வகையில் 'பீட்சா 4' இருக்கும். படப்பிடிப்பு தொடங்குவதற்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்," என்று அபி ஹாசன் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ‘இமெயில்’ படத்தின் டீசரை வெளியிட்ட விஜய்சேதுபதி




சென்னை, 02 ஜனவரி 2024: எஸ் ஆர் பிலிம் பேக்ட்ரி சார்பில் எஸ் ஆர் ராஜன் தயாரித்து இயக்கியுள்ள படம் ‘இமெயில்’. இப்படத்தில் கன்னட திரையுலகின் முன்னணி நடிகை ராகினி திவிவேதி கதாநாயகியாக நடிக்க, கதாநாயகனாக ‘முருகா’ அசோக்குமார் நடித்துள்ளார். மேலும் போஜ்புரி மற்றும் ஹிந்தி படங்களில் நடித்து புகழ்பெற்ற ஆர்த்தி ஸ்ரீ, ஆதவ் பாலாஜி, அக்ஷய்குமார், ஆரஞ்சு மிட்டாய் பிரபா, வனிதா, ரத்னா ஆகியோரின் நடிப்பில் உருவாகியுள்ளது இமெயில்.

இப்படம் ரிலீஸுக்கு தயாராகி வரும் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் இதன் ஃபர்ஸ்ட்லுக்கை இயக்குநர் அமீர் வெளியிட்டார். இந்தநிலையில் நடிகர் விஜய்சேதுபதி இப்படத்தின் டீசரை வெளியிட்டார். இந்த நிகழ்வில் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான எஸ் ஆர் ராஜன், இரண்டாவது கதாநாயகனான ஆதவ் பாலாஜி, மதுராஜ் மற்றும் படக்குழுவினர் பங்கு பெற்றனர்.

டீசரை ஆர்வமுடன் பார்த்து ரசித்த நடிகர் விஜய்சேதுபதி படக்குழுவினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டதுடன் அவர்களுக்கு அன்பு முத்தங்களையும் பரிசளித்து இன்ப அதிரச்சி அளித்தார். ஆன்லைன் விளையாட்டு மோசடியை அம்பலப்படுத்தும் வகையில் அதேசமயம் காமெடி, ஆக்சன், சென்டிமென்ட் கலந்த சஸ்பென்ஸ் திரில்லராக இப்படம் உருவாகியுள்ளது.

இப்படத்தில் மறைந்த நடிகர் மனோபாலா மற்றும் லொள்ளு சபா மனோகர் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களிலும் பில்லி முரளி வில்லனாகவும் நடித்துள்ளனர். அவினாஷ் கவாஸ்கர் இப்படத்திற்கு இசையமைக்க திரவுபதி புகழ் ஜுபின் பின்னணி இசை மேற்கொண்டு இருக்கிறார். கன்னட சினிமாவில் கிட்டத்தட்ட 30 படங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்ட செல்வம் முத்தப்பன் இப்படத்தின் ஒளிப்பதிவை கவனித்துள்ளார். வேலையில்லா பட்டதாரி உள்ளிட்ட படங்களில் பணியாற்றிய ராஜேஷ் குமார் இப்படத்தின் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார்.

தமிழ், கன்னடம் என இரு மொழிகளில் இப்படம் உருவாகி உள்ளது.

# ஜித்தன் ரமேஷின் இதுவரை இல்லாத வகையில் ஒரு வித்தியாசமான நடிப்புடன் ரூட் நம்பர் 17




சென்னை, 02 ஜனவரி 2024: அமர் ராமச்சந்திரன் தயாரிப்பில் அபிலாஷ் தேவன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ரூட் நம்பர் 17. இந்த படத்தின் டிரைலர் வெளியான போதே ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இந்நிலையில் இந்த வாரம் டிசம்பர் 29 ஆம் தேதி திரையரங்குகளில் படம் வெளியாகி உள்ளது. இந்த படத்தில் ஜித்தன் ரமேஷ், அஞ்சு பாண்டியா, ஹரிஷ் பேரடி, அகில் பிரபாகர், அனுஶ்ரீ போத்தன், ஜார்ஜ், நிகில் அமர், அருவி மதன் ஆகியோர் நடித்துள்ளனர். ஒசேப்பச்சான் இசையமைக்க பிரசாந்த் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

தொடக்கத்தில் தென்காசி அருகில் உள்ள ஒரு காட்டுப் பகுதிக்கு ஒரு காதல் ஜோடி காரில் பயணம் செய்கின்றனர், விடுமுறையை கழிக்க அன்று இரவு அந்த நடுக்காட்டில் தங்குகின்றனர். அவர்களை ஒரு காட்டுவாசி பிடித்து குகையில் அடைத்து விடுகிறார். பின்பு அவர்களை தேடி போலீஸ் வருகின்றனர். இறுதியில் என்ன ஆனது? அந்த இரண்டு பேரையும் போலீசார் காப்பாற்றினார்களா? என்பதே ரூட் நம்பர் 17 படத்தின் கதை. இன்வெஸ்டிகேஷன் திரில்லர் வடிவில் இந்த படம் உருவாகியுள்ளது.

இயக்குனர் அபிலாஷ் தேவன் இயக்கத்தில் உருவான இரண்டாவது படம் இது. டெக்னிக்கலாக படம் மிகச்சிறப்பாக உள்ளது. ஒரு த்ரில்லர் படத்திற்கு ஏற்றவாறு ஒளிப்பதிவு, பின்னணி இசை, எடிட்டிங் என கச்சிதமாக உள்ளது. இந்த படத்தின் முக்கிய கதாபாத்திரமான ஜித்தன் ரமேஷ் இதுவரை இல்லாத வகையில் ஒரு வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளார். மற்றொரு முக்கிய கதாபாத்திரத்தில் அஞ்சு பாண்டியா நடித்துள்ளார். படத்தில் அதிகபட்ச காட்சிகளில் வருவது இவரே. பாறைகளில் உருண்டு உடல் முழுக்க சேரும் சகதியுடன் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளார். அரசியல்வாதியாக வரும் ஹரிஷ் பேரடி, போலீஸ் கதாபாத்திரத்தில் வரும் ஜார்ஜ் மற்றும் அருவி மதன் அந்த கதாபாத்திரத்திற்கு ஏற்ற நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த படத்திற்காக அனைவரும் கடும் உழைப்பை போட்டுள்ளனர் என்பதை படம் பார்க்கும்போது நமக்கு தெரிகிறது. முன்னதாக படத்தின் டிரைலர் வெளியீட்டு விழாவில் 55 டிகிரி செல்சியஸில் படப்பிடிப்பு நடத்தப்பட்டதாக இயக்குனர் குறிப்பிட்டிருந்தார். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் 53 நிமிடங்கள் மட்டுமே ஓடும் இந்த படத்தின் முதல் பாதி அதிரடி. ஜாக்கி ஜான்சனின் சண்டைக் காட்சிகள் ரசிக்க வைக்கிறது. ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் அருமையான டைலிங் செய்துள்ளனர்.

# சேலம் மாவட்டத்தில் ஏழை விவசாயிகளின் நிலங்களை அபகரித்துள்ள மாவட்ட பாஜக நிர்வாகியை கைது செய்திடுக! தமிழக அரசுக்கு சிபிஐ (எம்) வலியுறுத்தல்!!



சென்னை, 02 ஜனவரி 2024: சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, ராமநாயக்கன் பாளையம் கிராமம், தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சார்ந்த முதியவர்களும், ஏழை விவசாயிகளுமான கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் 6 1/2 ஏக்கர் நிலத்தை தனது பெயரில் மாற்றி போலி பத்திரம் செய்த பாஜகவின் சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளரும், கொலை - நில அபகரிப்பு போன்ற கிரிமினல் வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளியுமான குணசேகரன் என்பவரை உடனடியாக கைது செய்திட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

சேலம் மாவட்ட பாஜக பொறுப்பாளர் குணசேகரன் என்பவர் வயதான ஏழை விவசாயிகளான கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் நிலத்தை அடிமாட்டு விலைக்கு வாங்க முற்பட்ட போது அவர்கள் விற்பதற்கு முன்வராததால் காவல்துறை, வருவாய்த்துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளின் துணையோடு பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு தனது பெயருக்கு போலி பத்திரம் செய்துள்ளார். விவசாயிகளையும் தங்களின் சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத வகையில் அடியாட்களை வைத்து கொலைமிரட்டல் விடுத்து அச்சுறுத்தியும் உள்ளார். இது குறித்து காவல்துறையில் புகார் செய்யப்பட்டும் தனது பாஜக அரசியல் பின்னணியையும், கிரிமினல் குற்ற பின்னணியையும் பயன்படுத்திக் கொண்டு நடவடிக்கை எடுக்காத வகையில் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளார். இவர்களது நிலத்தை அபகரித்தது போல் இப்பகுதியில் ஏராளமான விவசாயிகளின் நிலங்களையும் அபகரித்துள்ளது சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் கொலை, கொள்ளை, வழிபறிப்பு, போதைப் பொருட்கள் கடத்தல், நில அபகரிப்பு என பல்வேறு குற்ற பின்னணிகளை கொண்டவர்கள் பாஜக நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் கூட தனது சொந்த கட்சிக்காரரான நடிகர் கௌதமியின் 25 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்தை பாஜகவினரே அபகரித்தது நாடறியும். இதுபோன்று தமிழகம் முழுவதும் ஒன்றிய ஆட்சியதிகாரத்தை பயன்படுத்தி பாஜகவினர் சட்டத்திற்கு புறம்பான வேலைகளில் ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஏழை விவசாயிகளின் நிலங்களை அபகரித்துள்ள சேலம் பாஜக மாவட்ட பொறுப்பாளர் குணசேகரனை நில அபகரிப்பு சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்டு கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து உடன் கைது செய்திடவும், இவருக்கு உடந்தையாக இருக்கும் காவல்துறை, வருவாய்த்துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளை கைது செய்து உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு இவரால் அபகரிக்கப்பட்ட நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு திரும்ப வழங்கிடவும், கொலை மிரட்டலுக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்கிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசையும், சேலம் மாவட்ட நிர்வாகத்தையும் வலியுறுத்துகிறது.

பிஜேபியால் அமலாக்கத்துறை எப்படி தவறாக பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இந்த சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகும். அதிலும் சாதியை குறிப்பிட்டு சம்மன் அனுப்பியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. எனவே, பட்டியல் சாதியை சார்ந்த விவசாயிகளின் நிலத்தை திட்டமிட்டு அபகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ள குணசேகரனுக்கு ஆதரவாக செயல்பட்டு, அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ள அமலாக்கத்துறை அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது இவ்வாறு தனது அறிக்கையில் சி பி எம் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

# பாரதத்தில் எங்கள் நோக்கம் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதாகும் - பால் ரக்ஷா

சென்னை, 02 ஜனவரி 2024: அன்பான ஆதரவாளர்களே, பேரழிவை ஏற்படுத்திய மைச்சாங் புயல் தென்னிந்தியாவில் அழிவின் பாதையை விட்டுச்சென்றுள்ளது, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் முழுவதும் நான்கு மாவட்டங்களில் சுமார் ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் சென்னையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரையோரங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. குறைந்தது 17 பேர் இறந்துள்ளனர், மேலும் 41,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டனர், இதில் தமிழ்நாட்டில் 32,158 பேர் மற்றும் ஆந்திராவில் 9,500 பேர் உள்ளனர். 4967 அரசு முகாம்களுக்கு மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு துப்புரவுப் பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் வீடு/சுகாதாரப் பொருட்கள் மற்றும் கல்விப் பொருட்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் நமது முயற்சிகள் அவசரமாக தேவைப்படுவதின் அவசியத்தை நாங்கள் உணர்கிறோம் மற்றும் பால் ரக்ஷா பாரதத்தில் எங்கள் நோக்கம் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதாகும். பால் ரக்ஷா பாரத் ஆந்திராவில் உள்ள மச்சிலிப்பட்டினம் மற்றும் நெல்லூர் மற்றும் திருவள்ளுவர் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சென்னை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி தேவைகளை பூர்த்தி செய்கிறது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் கடலோர மாவட்டங்களாகும், அங்கு வீடுகளில் நீர் உட்புகுதல் வீடுகளின் உள்கட்டமைப்பு, வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பிள்ளைகளின் கல்வி உபகரணங்களை சேதப்படுத்தியுள்ளது. இந்த பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க எங்களுடன் கைகோர்க்குமாறு ஊடகங்களையும், அர்ப்பணிப்புள்ள எங்களுடைய ஆதரவாளர்களையும் நாங்கள் அழைக்கிறோம்.

ஒவ்வொரு நன்கொடையும், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, சுத்தமான நீர் மற்றும் தங்குமிடம் போன்ற அத்தியாவசிய தேவையை வழங்குவதிலும் மிக முக்கியமாக மேலும் இந்த நெருக்கடியில் சிக்கி தவிக்கும் குழந்தைகளுக்கு உதவியாக இருக்கும் . மாற்றத்தை ஏற்படுத்த எங்களுடன் சேருங்கள். உங்கள் ஆதரவு, மைச்சாங் சூறாவளிக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், நம்பிக்கையை மீட்டெடுக்கவும் உதவும்.

நன்கொடை விவரங்கள் மற்றும் எங்கள் நிவாரண முயற்சிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து எங்கள் வலைத்தளமான www.balrakshabharat.org ஐப் பார்வையிடவும்

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுடனான கலந்துரையாடல்




சென்னை, 02 ஜனவரி 2024: சென்னையில், கல்விப் பணியில் சிறந்து விளங்கும், முன்னணிக் கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, இன்று கியான் பவன் அரங்கில், இந்திய அரசின் நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுடன் மாணவர்கள் கலந்துரையாடும் அமர்வை சிறப்புடன் நடத்தியது. “புதிய தசாப்தத்திற்குள் இந்தியாவை மாற்றுதல்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வானது, நாட்டின் பொருளாதார மற்றும் நிதிநிலைப் பற்றிய நுட்பமான அறிவை மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

உருமாறிவரும் உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்காலத் தலைமுறையினர் ஒவ்வொருவரும் தகவல் மற்றும் முன்னோக்குச் சிந்தனையோடு வெற்றிபெறும் வகையில் அவர்களை ஆயப்படுத்தக் கூடிய முயற்சியில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி உறுதியான நிலைப்பாட்டுடன் செயல்பட்டு வருகிறது. ‘புதிய தசாப்தத்திற்குள் இந்தியாவை மாற்றுதல்' என்னும் இக்கலந்துரையாடல் நிகழ்வு, மாறிவரும் பொருளாதார சூழலுக்கேற்ப மாணவ சமுதாயத்தை வளர்த்தெடுப்பதில் முனைப்புடன் செயலாற்றி வரும், கல்விசார் நிலையில் தன்னை முழுமையாக முன்னிறுத்திக் கொண்டிருக்கும் கல்லூரியின் செயல்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்திய அரசின் நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் முக்கியமான அம்சங்களைக் கோடிட்டுக் காட்டினார். பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக விளங்கக் கூடிய சிக்கலான உத்திகள் உட்பட பல்வேறு தலைப்புகள் சார்ந்த நுட்பமான அறிவுசார் கருத்துகளைத் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், சுயசார்புடைய இந்தியாவை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கக் கூடிய பாதுகாப்புத்துறையில் பாதுகாப்புத் தளவாடங்கள் மிகுதியாக உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது குறித்து வலியுறுத்தப்பட்டது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், இயந்திரங்களின் வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் வேலைவாய்ப்பில் கணிசமான பங்களிப்பை ஏற்படுத்தியிருத்தல் போன்ற அந்நிறுவனங்களின் முக்கியப் பங்களிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டினார். துளிர் நிறுவனம் பற்றிப் பதிலளித்த அமைச்சர், அந்நிறுவனங்களின் வழி ஏற்பட்டுள்ள மாற்றத்தால் உண்டாகியிருக்கும் தாக்கங்களை எடுத்துரைத்தார், புதுமையான முறைகளைக் கையாண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டிருப்பதில் அவர்களுக்கு முக்கியப் பங்கிருப்பதை சுட்டிக் காட்டினார். அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர் டாக்டர் ம.ம.ரம்யா, அவர்கள் கூறுகையில் “நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுடனான இக்கலந்துரையாடல் வாய்ப்பு, கல்லூரியின் வரலாற்றில் ஒரு மகத்துவமான நிகழ்வாக அமைந்துள்ளது. மாற்றங்களை முன்னெடுப்பதின் மூலம், இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடிய முன்முயற்சிகளை விவாதிக்கும் தருணத்தில் நாங்களும் அதில் ஒரு அங்கமாக இருப்பதை எண்ணி பெருமிதம் கொள்கிறோம். இத்தகைய கலந்துரையாடல்கள் மாணவர்கள் தங்கள் கல்விசார் அறிவை வளர்த்துக் கொள்ள பேருதவியாய் உள்ளன. மேலும் மாணவர்களுக்கு, நாட்டின் பொருளாதாரப் பாதையில் ஒரு தெளிவான கண்ணோட்டத்தை வழங்குவதோடு இந்தியாவின் வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தங்கள் பங்களிப்பைச் செய்யவும் அவர்களை ஊக்குவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடல் , கல்வியின் தன்மையை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், இந்தியாவின் அரசியல் மற்றும் பொருளாதாரத் தன்மை குறித்த மாணவர்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதிலும் இன்றியமையாப் பங்கு வகிக்கிறது. இத்தகைய நடைமுறைச் சிந்தனையோடு கூடிய கலந்துரையாடல்களை மேற்கொள்வது, நடப்பு நிகழ்வுகள் பற்றிய முழுமையான புரிதலை வளர்ப்பதோடு, நடப்பியல் உலகின் சிக்கல்களை வழிநடத்தத் தேவையான அறிவு மற்றும் மதி நுட்பத்தை மாணவர்களிடையே வளர்க்க உதவுகிறது. அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மாறாமல் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் கல்வியின் மரபார்ந்த எல்லைகளைத் தாண்டிய வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்க உறுதிபூண்டுள்ளது, மேலும் தொடர்ந்து மாறி வரும் உலகில், அறிவும் பொறுப்பும் மிகுந்த குடிமக்களாக விளங்கவும் அவர்களை மேம்படுத்திக் கொண்டிருக்கிறது.

# ஐஐசி லக்ஷ்யா ஏப்ரல் 2024 பேட்ச்களுக்கான சேர்க்கைகளை அறிவிக்கிறது

சென்னை, 02 ஜனவரி 2024: இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் காமர்ஸ் லக்ஷ்யா ஏப்ரல் 2024 இல் தொடங்கும் பேச்சுகளுக்கான சேர்க்கைகளை அறிவித்துள்ளது. தற்போது 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் ஐஐசி லக்ஷ்யாவில் சி ஏ மற்றும் சி ஏசி ஏ படிப்புகளுக்கான இந்த ப்ரீ ரிசல்ட் பிரிவுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். இந்த படிப்புகள் இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கும். ஜூன் 2024 இல் தொடங்கும் சி எம் ஏ-இந்தியா, சி எம் ஏ-யூ எஸ் மற்றும் சி எஸ் படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஐஐசி லக்ஷ்யா வில் உள்ள பயிற்சியானது மாணவர்களுக்கு வரவிருக்கும் சி ஏசி ஏ, சி ஏ, சி எம் ஏ மற்றும் சி எஸ் தேர்வுகளுக்குத் தயாராவதற்கு ஒரு முழுமையான உத்தியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில்துறை நிபுணர்களின் வழிகாட்டுதலின் கீழ், மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்துடன் மாணவர்களுக்கு தீவிர பயிற்சி மற்றும் தனிப்பட்ட வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. 14 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், ஐஐசி லக்ஷ்யா 600+ நிபுணர் குழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, அவர்கள் மாணவர்களுக்குத் தங்களின் அசைக்க முடியாத ஆதரவையும் வழிகாட்டுதலையும் அர்ப்பணிப்புடன் வழங்குகிறார்கள். பரீட்சை சார்ந்த நடைமுறைகளுடன் தொடர்ச்சியான பயிற்சி தேர்வுகளும் வழங்கப்படுகின்றன. தனிச்சையான ஒழுங்குபடுத்தப்பட்ட பாடத்திட்டம், ஒவ்வொரு மாணவரின் தனித்துவமான கற்றல் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது என்று ஐஐசி லக்ஷ்யா நம்புகிறது. அடிக்கடி கல்வி மதிப்பாய்வுகள் மற்றும் தனிப்பட்ட செயல்திறன் பகுப்பாய்வுகள் மாணவர்களின் வளர்ச்சியை மதிப்பிடுகின்றன. லக்ஷ்யாவில் வடிவமைக்கப்பட்ட பயிற்சியானது, மாணவர்கள் தங்கள் சி ஏசி ஏ, சி ஏ, சி எம் ஏ மற்றும் சி எஸ் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குத் தயாராக இருப்பதை உறுதி செய்கிறது.

ஐஐசி லக்ஷ்யா இல் உள்ள மாணவர்கள் சி ஏசி ஏ, சி ஏ, சி எம் ஏ-இந்தியா, சி எம் ஏ-யூ எஸ்ஏ மற்றும் சி எஸ் படிப்புகளுடன் பி.காம் உடன் படிக்கலாம், படிக்கும் மாணவர்களுக்கு, யூஜிசி-இணைந்த பல்கலைக்கழகத்தில் பட்டம் வழங்கப்படும். இந்தப் படிப்புகளை முடித்தவுடன், தனிநபர்கள் உலகளாவிய நிதி மற்றும் வர்த்தக நிபுணராக சான்றிதழைப் பெற முடியும், இது உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிதிக் களங்களில் வாய்ப்புகளைத் தொடர நல்வாய்ப்பாக அனுமதிக்கிறது. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் காமர்ஸ் லக்ஷ்யா 75000 க்கும் மேற்பட்ட வெற்றிகரமான முன்னாள் மாணவர்களுடன் 50 க்கும் மேற்பட்ட சர்வதேச தரவரிசைகளையும் 600 க்கும் மேற்பட்ட தேசிய தரவரிசைகளையும் உருவாக்கியுள்ளது.

# பாரத்பே நிதியாண்டில் வருவாயில் 182% வளர்ச்சியைப் பதிவுசெய்தது, ஈபிஐடிடிஏ இழப்பு ரூ 158 கோடி குறைக்கப்பட்டது ஈபிஐடிடிஏ இழப்பும் தோராயமாக ரூ.158 கோடி குறைந்துள்ளது

திருச்சி, 02 ஜனவரி 2024: இந்தியாவின் முன்னணிப் பெயரான ஃபின்டெக் நிறுவனமான பாரத்பே, 2023 ஆம் நிதியாண்டிற்கான தனது நிதிச் செயல்திறனை முக்கிய வணிகப் பிரிவுகளில் கணிசமான வளர்ச்சி மற்றும் மூலோபாய முன்னேற்றங்களைக் காட்டுகிறது. ஃபின்டெக் நிறுவனம் எஃப்ஒய்23 இல் செயல்பாடுகளின் வருவாயில் 182% அதிகரிப்பைப் பதிவுசெய்தது, எஃப்ஒய்22 இல் 321 கோடி இலிருந்து எஃப்ஒய்23 இல் 904 கோடி ஆக இருந்தது. வரிக்கு முந்தைய இழப்பைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, ரூ. 5,594 கோடி முதல் ரூ 886 கோடி வரை. கூடுதலாக, ஈபிஐடிடிஏ இழப்பும் சுமார் ரூ. 158 கோடி குறைந்துள்ளது, இது நிதி நிலைத்தன்மையை நோக்கிய கவனம் செலுத்தும் முயற்சிகளைக் காட்டுகிறது.

கடன் வழங்குவதில், பாரத்பே இன் வணிகக் கடன் பிரிவு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது, 129% கடன்கள் எளிதாக்கப்பட்டன (ரூ. 5,339 கோடியை எட்டியது), வணிகர்களை மேம்படுத்துவதில் பாரத்பே இன் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது. கியூஆர் பயன்பாடு, கிரெடிட் கார்டு பில் கொடுப்பனவுகள் மற்றும் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட புதுமையான வருவாய் வழிகளையும் பாரத்பே அறிமுகப்படுத்தியது. மறுபுறம், ஸ்வைப் பிசினஸ் டிபிவி இல் குறிப்பிடத்தக்க 63% அதிகரிப்பை கண்டது, மேலும் எஃப்ஒய்23 இல் சுமார் 8 லட்சம் புதிய சவுண்ட்பாக்ஸ் சாதனங்களை நிறுவியது பாரத்பே தனது இருப்பை விரிவுபடுத்துவதற்கும், நிதிச் சேர்க்கை மற்றும் நாடு முழுவதும் டிஜிட்டல் பேமெண்ட்டுகளை ஏற்றுக்கொள்வதற்குமான தொடர்ச்சியான முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது. .

இந்த மைல்கல்லைப் பற்றிப் பேசிய, பாரத்பேயின் சிஇஎஃப்ஓ மற்றும் இடைக்கால சிஈஓ நளின் நேகி, “பாரத்பே இல் மற்றொரு ஆண்டு சிறப்பான செயல்திறனை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் வணிக செங்குத்துகள் முழுவதும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, மேம்படுத்தப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணைந்து, எங்கள் வணிகர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான மதிப்பை உருவாக்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த முடிவுகள் எங்கள் குழுவின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் ஆதரவின் சான்றாகும்.

நளின் மேலும் கூறினார், “முன்னோக்கிச் செல்லும்போது, எங்கள் மூலோபாய கவனம் நிலையான லாபம், அளவிடுதல் கடன், பிஓஎஸ் மற்றும் சவுண்ட்பாக்ஸ் வணிகங்கள் மற்றும் புதிய வணிகத்தை மையமாகக் கொண்ட தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறது. ஒரு நிலையான வணிகத்தை உருவாக்குவதற்கும், நிதி உள்ளடக்கத்தை வளர்ப்பதற்கும், எங்கள் கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும் மற்றும் பாரத்பேயை நாட்டின் முன்னணி வணிகர்-முதல் ஃபின்டெக் நிறுவனமாக நிறுவுவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்

# எண்ணூரில் அமோனியா வாயுக்கசிவிற்கு காரணமானோர் மீது நடவடிக்கை: பசுமை தீர்ப்பாயம் அறிவிப்பு

சென்னை, 02 ஜனவரி 2024: எண்ணூரில் அமோனியா வாயுக்கசிவிற்கு காரணமானோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பசுமை தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

சென்னை எண்ணூர் அருகே பெரியகுப்பம் பகுதியில் கோரமண்டல் உரத்தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலைக்கு கப்பல் மூலம் திரவ அமோனியா எடுத்துவர ஏதுவாக கடலில் இருந்து தொழிற்சாலைவரை குழாய் அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் இருந்து கடந்த 27-ந் தேதி திடீரென வாயுக்கசிவு ஏற்பட்டது. வாயுக்கசிவால் தொழிற்சாலைக்கு அருகில் வசித்து வந்த பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல், வாந்தி, மயக்கம், கண் எரிச்சல் உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்பட்டன. வாயுக்கசிவால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து, கோரமண்டல் உரத்தொழிற்சாலையை தற்காலிகமாக மூட தமிழக அரசு உத்தரவிட்டது. இதையடுத்து எண்ணூர் கோரமண்டல் ஆலையில் ஏற்பட்ட



அமோனியா வாயுக்கசிவு விவகாரம் தொடர்பாக தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரிக்க முடிவு செய்தது. அதன்படி, இந்த வழக்கு இன்று (2-ம் தேதி) விசாரணைக்குப் பட்டியலிடப்பட்டது.

அப்போது எண்ணூரில் அமோனியா வாயுக்கசிவிற்கு காரணமானோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். வாயுக்கசிவால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி வழங்கப்படும். தொழில்துறை பாதுகாப்பை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உறுதிப்படுத்த வேண்டும் என்று தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

மேலும் விபத்து நடப்பதற்கு முன் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?; உர ஆலைகளில் அடிக்கடி ஆய்வு ஏன் நடத்தவில்லை என தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கேள்வி எழுப்பியுள்ளது.